# இலங்கையில் கருத்து வேறுபாட்டின் அடக்குமுறை

**ஜனவரி - மார்ச் 2018**



தம்புத்தேகமவில் இடம்பெற்ற ஓர் ஆர்ப்பாட்டத்தின்போது பொலிசாரின் தாக்குதல் (**Video – Ada derana)**
[https://www.youtube.com/watch?v=pDgrULUGEb8](https://www.youtube.com/watch?v=pDgrULUGEb8))

**INFORM** Human Rights Documentation Centre
www.ihrdc.wordpress.com informcolombo@gmail.com

இலங்கையில் கருத்து வேறுபாட்டின் அடக்குமுறை: January, 2018 -March, 2018
© INFORM மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் நிலையம், 2018

Colombo, Sri Lanka
Blog: https://ihrdc.wordpress.com/
Email: informcolombo@gmail.com

## உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள்

**அ.** பெண் தேர்தல் அபேட்சகர்களுக்கு எதிரான வன்முறை

**ஆ.** வடக்கின் தமிழ் செயலார்வலர்களுக்கு தடைகள் மற்றும் அச்சுறுத்தல்கள்

**இ.** மாணவ செயலார்வலர்கள் மீதான அடக்குமுறை

**ஈ.** இதழியலாளர்களுக்கு எதிரான அச்சுறுத்தல்கள் மற்றும் தடைகள்

**உ.** போராட்டங்களின் அடக்குமுறை

**ஊ.** அச்சுறுத்தல்களினதும், பயமுறுத்தல்களினதும் வேறு வடிவங்கள்

**எ.** ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம்

*இலங்கையின் மனித உரிமை மீறல்களை ஆவணப்படுத்தவும் கண்காணிக்கவும் 1990,இல் இன்ஃபோர்ம் (INFORM) நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டது .குறிப்பாக இன மோதல்களும் போரும் நிலவிய சூழலிலேயே இது உருவாக்கப்பட்டது .உள்ளூர் ,தேசிய ,சர்வதேச மட்டங்களில் எழுத்துமூலமும் வாய்மொழி மூலமும் இடையீடுகளை மேற்கொள்வதிலும் ,அறிக்கைகளை வெளியிடுவதிலும் ,அது தன்னை ஈடுபடுத்திக் கொண்டது .படிப்படியாகவும் அடிக்கடியும் உரிமைகள் மீறப்படுகின்ற சமூகங்களை மையப்படுத்தி செயற்படுவதிலும் இன்ஃபோர்ம் தன்னை அர்ப்பணித்தது .தற்போது தேர்தல்களைக் கண்காணிப்பதிலும் கருத்துச் சுதந்திரத்திற்காகச் செயற்படுவதிலும் மனித உரிமைகள் காப்பாளர்களை மையப்படுத்தியும் இன்ஃபோர்ம் தன்னை ஈடுபடுத்தி வருகின்றது .இலங்கையில் கொழும்பை மையமாகக்கொண்டு இன்ஃபோர்ம் இயங்கி வருவதோடு ,உள்ளூர் செயற்பாட்டாளர்கள் ,குழுக்கள் வலைப்பின்னல்களுடனும் ,பிராந்திய )ஆசிய (சர்வதேச மனித உரிமைகள் வலைப்பின்னல்களுடனும் நெருக்கமாகச் செயற்பட்டு வருகின்றது.*

# உள்ளடக்கம்

முறைமையியல்............................................................3

சூழமைவு மற்றும் நிறைவேற்றுச் சாராம்சம்............................................................3

அ. பெண் தேர்தல் அபேட்சகர்களுக்கு எதிரான வன்முறை............................................................5

1. முல்லைத்தீவு மாவட்டத்தில் பெண் அபேட்சகர் மீதான தாக்குதல்............................................................5

2. மொனராகலை மாவட்டத்தில் பெண் அபேட்சகர் மீதான தாக்குதல்............................................................5

3. மட்டக்களப்பு மாவட்டத்தில் பெண் அபேட்சகர் மீதான தாக்குதல்............................................................6

4. பொலன்னறுவை மாவட்டத்தில் பெண் அபேட்சகர் ஒருவருக்கு எதிராகப் பாலியல் துப்பிரயோகம்............................................................6

5. பெண் அபேட்சகர் வீட்டினுள் படையெடுப்பு............................................................6

6. முஸ்லிம் பெண் அபேட்சகர்களுக்கு எதிரான மௌலவியின் ஷவீடியோ' கருத்துக்கள்............................................................6

7. பொலிசாரினால் பெண் அபேட்சகர் வீடு மீது திடீர் வேட்டை............................................................7

ஆ. வடக்கின் தமிழ் செயலார்வலர்களுக்கு தடைகள் மற்றும் அச்சுறுத்தல்கள்............................................................8

8. ஊர்காவற்றுறையில் காணி மீது போராட்டம் நடத்திய தமிழர்கள் கடற்படைப் புலனாய்வாளர்களினால் அச்சுறுத்தப்பட்டனர்............................................................8

9. கேப்பாப்பிலவில் காணி ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போராடுகின்ற தமிழர்களுக்கு எதிரான பொலிஸ் நடவடிக்கை............................................................9

10. போராட்டமொன்றில் இணைந்த பின்னர் வட மாகாண சபை உறுப்பினர் கைது செய்யப்பட்டார்............................................................9

இ. மாணவ செயலார்வலர்கள் மீதான அடக்குமுறை............................................................10

11. இரு பகிடிவதை-எதிர்ப்பு மாணவர்கள் மீதான தாக்குதல்............................................................10

12. பல்கலைக்கழக மாணவர்களினதும், பெற்றோரினதும் போராட்டம் கலைக்கப்பட்டது............................................................11

ஈ. இதழியலாளர்களுக்கு எதிரான அச்சுறுத்தல்கள் மற்றும் தடைகள்............................................................12

13. இரு தொலைக்காட்சி இதழியலாளர்களுக்கு எதிரான அச்சுறுத்தல்கள்............................................................12

14. ஆயுதப்படைகளினால் அல் ஜஸீரா குழு தடுக்கப்பட்டது............................................................13

15. இராணுவ அலுவலர்களினால் தமிழ் இதழியலாளர் தொந்தரவு செய்யப்பட்டார்............................................................13

உ. போராட்டங்களின் அடக்குமுறை............................................................15

16. பொலிஸ் காவலில் போராட்டக்காரர்கள் தாக்கப்பட்டனர்............................................................15

17. போராட்டம் நடத்திய கமக்காரர்கள் கைது செய்யப்பட்டனர்............................................................16

ஊ. அச்சுறுத்தல்களினதும், பயமுறுத்தல்களினதும் வேறு வடிவங்கள்............................................................17

18. லண்டனில் இலங்கை உயர் ஸ்தானிகராலய உயர் அதிகாரியினால் அச்சுறுத்தும் சைகை 17

19. நீதிமன்ற வளாகத்தின் உள்ளே பெண் வழக்கறிஞர் தாக்கப்பட்டார்............................................................18

20. முதலமைச்சர் ஒருவரினாலான துப்பிரயோகத்தை வெளிப்படுத்தியதற்காக பெண் அதிபருக்கு எதிராக மரண அச்சுறுத்தல்............................................................19

21. ர்ஜஏ.ஂயுஜனுளு தடுப்பு கருத்திட்டத்தில் ஈடுபட்டிருந்த அ.சா.தா. ஊழியர்கள் மீது தாக்குதல்............................................................19

எ. ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம்............................................................20

22. நடைமுறையிலான சட்டத்திற்கான திருத்தமொன்றின் ஊடாக ஒன்றுகூடுவதற்கான சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகள்............................................................20

## முறைமையியல்

2018 ஜனவரியிலிருந்து மார்ச் வரை, இலங்கையில் கருத்து வேறுபாட்டின் அடக்குமுறை தொடர்பான சில குறிப்பிடத்தக்க சம்பவங்களின் பொதுவான போக்குகளையும், விபரங்களையும் இந்த அறிக்கை வழங்குகின்றது. சூழமைவினை நிறைவேற்றுச் சாராம்சம் விபரிப்பதுடன், தலைப்பு மீது அரசாங்கத்தினதும் மற்றும் வேறு தொடர்பான தரப்புக்களினதும் நடத்தை உட்பட போக்குகளையும், அத்துடன் சில பொதுவான கண்டுபிடிப்புக்களையும் பகுப்பாய்கின்றது. அடுத்து, 7 தலைப்புக்களின் கீழ் 22 குறிப்பான சம்பவங்கள் விபரிக்கப்படுகின்றன. INFORMக்கு அறிக்கையிடப்பட்ட சம்பவங்கள் மற்றும் INFORM பணியாளரினதும், ஊடகங்களினதும் அவதானிப்புக்கள் மற்றும் அனுபவம் ஆகியன அறிக்கைக்கான தகவலின் மூலங்களாக விளங்குகின்றன.

## சூழமைவு மற்றும் நிறைவேற்றுச் சாராம்சம்

2018 ஜனவரியில், தனது ஐந்து வருடத் தவணையின் மூன்றாவது வருடத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முடித்துக்கொண்டார். அவரதும் மற்றும் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவினதும் தேர்தல் பிரச்சாரங்கள் பெருமளவு உரிமைகள் செயலார்வலர்களினாலும், சமூக இயக்கங்களினாலும் ஆதரவளிக்கப்பட்ட போதிலும், மனித உரிமைகள் மீதான முன்னேற்றம் 2018இலும் கூட தொடர்ந்துமே ஏமாற்றமாக விளங்கியது.

2018 பெப்ரவரி 10 அன்று நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தலானது 2018இன் முதலாவது காலாண்டின் போது குறிப்பிடத்தக்க நிகழ்வுகளில் ஒன்றாகும். பெண் அபேட்சகர்களுக்கு 25% ஒதுக்கீடு என்பது தேர்தலின் மிகவும் முன்னேற்றகரமான அம்சமாகும். இருந்தபோதிலும், அது முழுமையாக அமுல்படுத்தப்படவில்லை என்பது ஏமாற்றமளிப்பதாக இருந்தது. எனினும், பெண் அபேட்சகர்களின் அதிகரித்த எண்ணிக்கைக்கு பரவலான எதிர்ப்பும், பால்நிலை மீதான அடிப்படையிலான வன்முறையும் இருந்துள்ளன. நாடு முழுவதும் உள்ள சகல இனத்துவக் குழுக்களின் பெண் அபேட்சகர்கள் வன்முறையின் உடல்ரீதியானதும் மற்றும் வேறு வடிவத்திலானதுமான வன்முறைக்கு முகங்கொடுத்தனர். ஆனால், சமூக ஊடகங்கள் மீதான தாக்குதல்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் மீதான அச்சுறுத்தல் ஆகியன முஸ்லிம் பெண் அபேட்சகர்களை நோக்கி மிகவும் தீவிரமாக இடம்பெற்றிருந்தன.

தம்மைச் சிங்களப் பௌத்தர்கள் என அடையாளங்கண்ட குழுக்களினால் அம்பாறை மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களில் முஸ்லிம் சமூகம் மீது முறைமையான தாக்குதல்களைக் காலாண்டு கண்டது. கண்டியில், மூன்று உயிர்கள் இழக்கப்பட்டதுடன், பள்ளிவாசல்கள், வீடுகள், கடைகள், வாகனங்கள் ஆகியன உட்பட சொத்துக்களுக்கான சேதம் அம்பாறையை விட மிகவும் அதிகளவு கூடுதலானதாகும். இவ்விரு இடங்களிலும் சம்பவங்களைப் பொலிசார் வெறுமனே பார்த்துக்கொண்டிருந்ததாகவும், பதிலிறுப்புக்களைத் தாமதப்படுத்தியதாகவும் அத்துடன் அவை போதுமானவை அல்ல எனவும் பின்வாழ்பவர்களும் அத்துடன் நேரடி சாட்சிகளும் பொலிசாரைக் குற்றஞ்சாட்டினர். சில தருணங்களில் பொலிசின் விசேட அதிரடிப்படையினர் முஸ்லிம்களை உடல்ரீதியாகவும் மற்றும் வாய்மொழிரீதியாகவும் துஷ்பிரயோகித்துள்ளனர்.

இறுதியாக, காணாமல்போனோரின் அலுவலகத்தின் உறுப்பினர்கள் பெப்ரவரி 28 அன்று நியமிக்கப்பட்டனர். ஆனால், ஓர் இழப்பீடுகளுக்கான அலுவலகம், ஓர் உண்மை ஆணைக்குழு மற்றும் விசேட நீதிமன்றம் என ஏனைய மூன்று நிலைமாறுகால நீதி நிறுவனங்களைத் தாபிப்பது தொடர்ந்துமே உறுதியற்றதாகவும், நிச்சயமற்றதாகவும் விளங்கியதுடன், வரைவு சட்டவாக்கங்கள் கூட பரிமாறப்படவில்லை. வடக்கில் இராணுவத்தின் வகிபங்கினைக் குறைத்தல், இராணுவத்தின் ஆக்கிரமிப்பிலுள்ள காணிகளை விடுவிப்பது, அரசியல் கைதிகளுக்கான நீதி, யுத்தத்தில் இழந்தவர்களுக்கு நினைவேந்தலுக்கான சமமான வாய்ப்புக்கள் ஆகிய யுத்தம் தொடர்பான பிரச்சனைகளைக் கவனத்திற்கெடுப்பதற்கான ஏனைய நடவடிக்கைகள் வேதனை நிறைந்த விதத்தில் மெதுவாக விளங்கின அல்லது நிலவவே இல்லை. புதியதொரு அரசியலமைப்பு மீதான முன்னேற்றமும் இயக்கமற்றிருந்தது. முன்னைய ஆட்சியின் கீழ் இதழியலாளர்களினதும், சிவிலியன்களினதும் கொலை மற்றும் காணாமல்போகச்செய்தல் ஆகியன மீது இராணுவத்திற்கு எதிரான வழக்குகளும் அதிகளவு முன்னேற்றமின்றி இழுபட்டுக்கொண்டிருந்தன.

இராணுவ ஆக்கிரமிப்பிலான காணி தொடர்பான நீண்ட காலப் போராட்ட இயக்கங்களும், காணாமல்போகச்செய்யப்பட்டவர்கள் பற்றி பதில்களை நாடுதலும் வடக்கில் முன்னைய யுத்த வலயங்களில் தொடர்ந்தன. பெப்ரவரி - மார்ச்சில் அவை ஒரு வருடத்தை முடித்துக் கொண்டதனால் போராட்டங்கள் தீவிரப்படுத்தப்பட்டதுடன், பெப்ரவரி 4 அன்று சுதந்திரத் தினத்தன்று இராணுவத்தினராலும், பொலிசாரினாலுமான சில அடக்குமுறையிலான நடவடிக்கைகள் அறிக்கையிடப்பட்டிருந்தன.

சிங்களவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட பகுதிகளில் சில விடயங்களில், பொலிசாருக்கு எதிராக ஆத்திரத்திலான போராட்டக்காரர்கள் மூர்க்கத்தனமாக மாறியிருந்தனர். ஆனால், போராட்டக்காரர்களின் ஆயுதமற்றதன்மையையும், கோபமூட்டுதலையும் கரிசனைக்கெடுக்கையில், பொலிசாரின் பிரதிபலிப்புக்கள் சரிசமவிகிதமற்றதாகத் தோன்றுகின்றது. ஒரு தருணத்தில், கற்களை எறிந்த போராட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டது மட்டுமன்றி, பாதுகாவலில் தாக்கப்பட்டதாகவும் அறிக்கையிடப்பட்டுள்ளது. தனியார் மருத்துவ நிறுவனமொன்றுக்கு எதிராகப் போராடிய மாணவர்களும், பெற்றோரும் தாக்கப்பட்டதுடன், புதிய மாணவர்களைப் பகிடிவதை செய்வதை எதிர்த்த பல்கலைக்கழக மாணவர்கள் பகிடிவதை செய்தோரினால் தாக்கப்பட்டுமுள்ளனர்.

இதழியலாளர்கள் மீதான அச்சுறுத்தல்கள், தொந்தரவுகள் மற்றும் தடைகள் ஆகியவற்றின் பெருமளவு சம்பவங்கள் நாட்டின் வேறுபட்ட பகுதிகளிலிருந்து அறிக்கையிடப்பட்டிருந்ததுடன், இதில் இராணுவமும், அரசியல்வாதியொருவரின் ஆதரவாளர்களும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தனர். AIDSஐத் தடுப்பது குறித்த கருத்திட்டமொன்றில் ஈடுபட்டிருந்த அரச சார்பற்ற தாபன ஊழியர்களைக் கொண்ட குழுவொன்று ஊடகங்களினதும், பொலிசாரினதும் முன்னிலையில் ஏதோ ஒரு குழுவினால் தாக்கப்பட்டது. நீதிமன்றத்தின் முன்னால் சாட்சியமளிக்க வந்த போது பெண் வழக்கறிஞர் ஒருவர் தாக்கப்பட்டுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. பதுளையிலிருந்து பெண் பாடசாலை அதிபர் ஒருவர் மாகாண முதலமைச்சரினால் முழங்காலிடுமாறு கட்டாயப்படுத்தப்பட்டதுடன், இது வெளிப்படுத்தப்பட்டதிற்கும் அத்துடன் சம்பவத்திற்கு எதிராக முறையிடப்பட்டதிற்கும் பின்னர் தனக்கு மரண அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளதாக அவர் முறையிட்டுள்ளார். அத்துடன் இலங்கையின் இராஜதந்திரியின் பணியாளர்(இலங்கை இராணுவ வீரர் ) லண்டனில் போராட்டக்காரர்களை நோக்கி அச்சுறுத்தும் சைகைகளைச் செய்ததாகக் காணப்பட்டுள்ளது.

இருபத்திரண்டு சம்பவங்களில் 9 சம்பவங்களில் பாதிக்கப்பட்டவர்கள் பெண்களாக உள்ள அதேவேளை, போராட்டங்கள் போன்ற சுமார் 7 சம்பவங்களில் பாதிக்கப்பட்டவர்கள் ஆண்களையும், பெண்களையும் கொண்ட கலப்பிலானவர்களாவர். நாட்டின் 9 மாகாணங்களில் 8 மாகாணங்களிலிருந்து 22 சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. இரு சம்பவங்கள் தலைநகர் கொழும்பிலிருந்து இடம்பெற்ற அதேவேளை ஏனையவை முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, அனுராதபுரம், பொலன்னறுவை, புத்தளம், ஹம்பாந்தோட்டை, காலி, மொனராகலை, பதுளை மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களிலிருந்து அறிக்கையிட்பபட்டுள்ளன. ஒன்று லண்டனில் இடம்பெற்ற அதேவேளை, தன்னார்வ சமூக சேவைகள் தாபனங்கள் [Voluntary Social Services Organizations (VSSO)] அதிகாரச்சட்டத்திற்கான உத்தேசமான சட்டத் திருத்தம் மீதான இறுதியானது முழு நாட்டினதும் ஒன்றுகூடுவதற்கான சுதந்திரத்தை மறுதலையாக பாதித்திருக்கக்கூடும்.

## அ. பெண் தேர்தல் அபேட்சகர்களுக்கு எதிரான வன்முறை

உள்ளூராட்சி மன்றப் பிரதிநிதிகளில் 2%க்கு குறைவாக பெண்கள் விளங்கும் சூழமைவொன்றில், 2018இல் சகல உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களிலும் பெண் பிரதிநிதித்துவத்தின் 25%ஐக் கொண்ட கட்டாயமான ஒதுக்கீடொன்று பெருமளவு பெண்கள் குழுக்களினாலும், செயலார்வலர்களினாலும் மற்றும் அரசியல்வாதிகளினாலும் வரவேற்கப்பட்டது. ஆனால், நாடு முழுவதும் பெண் அபேட்சகர்களுக்கு எதிராகப் பெருமளவு வன்முறைச் சம்பவங்கள் தேர்தல்களுக்கு முன்னர் இடம்பெற்றன. பாரிய தேசிய அரசியல் கட்சிகளையும், பிராந்தியக் கட்சிகளையும் மற்றும் சுயேட்சைக் குழுக்களையும் சேர்ந்த முஸ்லிம், சிங்கள மற்றும் தமிழ்ப் பெண்கள் பாதிக்கப்பட்டனர். பெப்ரவரி 2 அன்று வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையொன்றில் தேர்தல்களின் போது பெண்களுக்கு எதிரான வன்முறை தொடர்பில் 34 முறைப்பாடுகளைத் தேர்தல் வன்முறைக் கண்காணிப்புக்கான நிலையம் [Centre for Monitoring Election Violence (CMEV)] பெற்றது. எனினும், பழிதீர்க்கப்படும் என்ற அச்சத்தின் காரணமாக பெருமளவு சம்பவங்கள் அறிக்கையிடப்படாததினால், இந்தத் தொகை கூடுதலாக இருக்கும் என செயலார்வலர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி மதிப்பைக் குறைக்கும் முயற்சி, தனிப்பட்ட வதிவிடங்களைச் சேதமாக்குதல், கணவன்மார்கள் மூலம் அச்சுறுத்தல்கள், வாய்மொழியிலான துஷ்பிரயோகம் மற்றும் தாக்குதல்கள், பாரதூரமான நிலைமையொன்றில் வைத்தியசாலைக்கு பெண் அபேட்சகர் அனுமதிக்கப்படுவதற்கு இட்டுச்சென்ற மிருகத்தனமான தாக்குதல் மற்றும் இன்னொன்றில் உடல்ரீதியாகத் தாக்கப்பட்டு, வீடொன்றில் பூட்டிவைக்கப்பட்டது என பெண் அபேட்சகர்களை நோக்கிய வன்முறையையும், அச்சுறுத்தலையும் அதே அறிக்கையும், பெண்கள் ஆசிய வலைப்பின்னலும் (Women's Action Network) குறிப்பிட்டிருந்தன. அரசியலுக்குள் பிரவேசிப்பதற்கு பெண்கள் பொருத்தமானவர்கள் அல்லர், பெண் அபேட்சகர்கள் 'மூளையற்ற பெண்கள்' என்ற அரட்டையையும் அத்துடன் சில வேளைகளில் பெண் அபேட்சகர்களை மறுதலையாகப் பாதிக்கும் வகையில் கள்ளத் தொடர்புகளின் வெளிப்படையான சார்த்துரைகளையும் பரப்புதல் போன்ற கூற்றுக்களினால் பாலியல்ரீதியிலான குறிப்புகளினாலும், அதைரியமூட்டும் கூருணர்வுகளினாலும் விளைவிக்கப்பட்ட உளவியல்ரீதியிலான மனவதிர்ச்சியை பெண்கள் உரிமைகள் செயலார்வலர்கள் குறித்துக்கொண்டுள்ளனர். "போட்டியிடுகின்ற முஸ்லிம் பெண்கள் உண்மையான முஸ்லிம்கள் அல்லர் என மௌலவிமார் கூறியுள்ளனர். பெண்கள் மேடையில் ஏறி, பகிரங்கமாகப் பேச முடியாது எனவும் அவர்கள் கூறியுள்ளார்கள்" என முஸ்லிம் பெண் அபேட்சகர் ஒருவர் அறிக்கையிட்டுள்ளார்.

பெண் அபேட்சகர்களுக்கு எதிரான வன்முறையின் சில உதாரணங்கள் கீழேயுள்ளன:

### 1. முல்லைத்தீவு மாவட்டத்தில் பெண் அபேட்சகர் மீதான தாக்குதல்

மஞ்சுளா பத்மநாதன் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அபேட்சகரொருவராவார். உள்ளூர் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் விசுவாசி ஒருவரினால் அவர் தாக்கப்பட்டதாகவும், அவரது வாய் அடைக்கப்பட்டு, நாடாவினால் மூடப்பட்டும், கண்கள் துணியால் மூடி மறைக்கப்பட்டும் தாக்கப்பட்டவரின் வீட்டில் ஜன்னலொன்றுடன் கட்டப்பட்டதாக அவர் வலியுறுத்துகின்றார். அவர் பொலிசாரிடம் முறையிட்டுள்ளார். ஆனால், ரயர்களைப் பயன்படுத்தி அவரும், அவரது குடும்பத்தினரும் எரியூட்டப்படுவார்கள் என அச்சுறுத்தப்பட்டு முறைப்பாட்டினை மீளப்பெறுமாறு பின்னர் அழுத்தப்பட்டதாகவும் அவர் வலியுறுத்துகின்றார்[1].

### 2. மொனராகலை மாவட்டத்தில் பெண் அபேட்சகர் மீதான தாக்குதல்

மொனராகலை மாவட்டத்தில் வெள்ளவாய தேர்தல் தொகுதியில் வெள்ளவாய பிரதேசச் சபைக்குப் சுயேட்சைக் குழுவொன்றிலிருந்து போட்டியிட்ட பெண் அபேட்சகர் ஒருவர் சுயேட்சைக் குழுக்களின் அபேட்சகர்களுக்கும், அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்களுக்கும் இடையிலான மோதலொன்றைத் தொடர்ந்து மிருகத்தனமாகத் தாக்கப்பட்டு, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக அறிக்கையிடப்பட்டுள்ளது[2].

---

[1] http://www.island.lk/index.php?page_cat=article-details&page=article-details&code_title=178551 *(22 ஜூலை 2018 அன்று அடையப்பட்டது)*

[2] http://www.sundaytimes.lk/180128/news/intimidation-insults-attempt-to-deter-women-poll-candidates-278866.html *(22 ஜூலை 2018 அன்று அடையப்பட்டது)*

### 3. மட்டக்களப்பு மாவட்டத்தில் பெண் அபேட்சகர் மீதான தாக்குதல்

மட்டக்களப்பு, ஏறாவூர் பகுதியில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் (ஸ்ரீ.ல.சு.க.) முஸ்லிம் பெண் வேட்பாளர் ஒருவரான அலியார் ரஹ்மான் பிரச்சாரம் செய்யும் போது, ஐக்கிய தேசியக் கட்சி (ஐ.தே.க.) அபேட்சகர் ஒருவரினால் தாக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளதாக சுதந்திரமானதும், நியாயமானதுமான தேர்தல்களுக்கான இயக்கம் [Campaign for Free and Fair Elections (CaFFE)] குறிப்பிடுகின்றது. பிரச்சாரத்தின் ஆரம்பத்திலிருந்து மட்டக்களப்பில் பெண் அபேட்சகர்கள் தொந்தரவை அனுபவித்துள்ளதாக CaFFE நிறைவேற்றுப் பணிப்பாளர் ரஞ்ஜித் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்தார்[3].

### 4. பொலன்னறுவை மாவட்டத்தில் பெண் அபேட்சகர் ஒருவருக்கு எதிராகப் பாலியல் துஷ்பிரயோகம்

CaFFEஇன் கூற்றுப்படி, பெப்ரவரி 2 அன்று, வெலிக்கந்தையில் ஐ.தே.க. அபேட்சகர் ஒருவரின் சாரதியினால் ஸ்ரீ.ல.சு.க. பெண் அபேட்சகர் ஒருவர் பாலியல்ரீதியாக துஷ்பிரயோகிக்கப்பட்டுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. பிரச்சாரமொன்றின் பின்னர் அவர் பிரயாணம் செய்து கொண்டிருந்த போது, சந்தேக நபர் அவரைப் புகைப்படமெடுத்துடன், பின்னர் அவரது மார்பகங்களையும் கசக்கியுமுள்ளார். அவர் பொலிசாரிடம் முறைப்பாடு செய்துள்ளார். சந்தேக நபர் பகுதியிலிருந்து தப்பியோடியுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது[4].

### 5. பெண் அபேட்சகர் வீட்டினுள் படையெடுப்பு

ஜனவரி 4 அன்று, மட்டக்களப்பு, செல்வநகரில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் அபேட்சகர் ஒருவரான கருணா அம்மான் அவரது வீட்டை உடைக்கச் செய்துள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது[5].

### 6. முஸ்லிம் பெண் அபேட்சகர்களுக்கு எதிரான மௌலவியின் 'வீடியோ' கருத்துக்கள்




*(பிரதிமை - மௌலவி நியாஸ் சித்திக் சிராஜ், புகைப்படம் - www.pinterest.com)*

"இன்று தலைகளை மூடியுள்ள முஸ்லிம் பெண்கள் போட்டியிடுவதுடன், ஏனைய ஆண்களுக்கு சுவரொட்டிகளில் தமது முகங்களையும் காட்டுகின்றனர். அரசியலில் பிரவேசிப்பதற்கு பெண்களுக்கு இஸ்லாத்தில் இடமில்லை. இப் பெண்கள் சமூகத்தையும், தமது கணவர்களையும்

---

[3] *http://www.island.lk/index.php?page_cat=article-details&page=article-details&code_title=179412 (22 ஜூலை 2018 அன்று அடையப்பட்டது)*

[4] *http://www.island.lk/index.php?page_cat=article-details&page=article-details&code_title=179412 (22 ஜூலை 2018 அன்று அடையப்பட்டது)*

[5] *http://www.island.lk/index.php?page_cat=article-details&page=article-details&code_title=178551 (22 ஜூலை 2018 அன்று அடையப்பட்டது)*

அவமானப்படுத்துகின்றனர். அவர்கள் பாவம் செய்தவர்கள் என்பதுடன், இஸ்லாத்தை நிந்தை செய்கின்றனர். தமது சுவரொட்டிகளைச் சுவர்கள் மற்றும் 'வட்ஸ்அப்'பில் வைத்திருத்தல் - வெறுப்பூட்டுகின்றது! கணவன்மார்களே, நீங்கள் என்ன செய்கின்றீர்கள்? அவர்களது சுவரொட்டிகளை முழு உலகமுமே பார்க்கின்றது. சீ! உங்களுக்கு வெட்கமில்லையா? பெண்களினால் நிருவகிக்கப்படும் எந்தச் சமூகமும் ஒருபோதுமே சிறந்து விளங்கமாட்டாது என இஸ்லாத்தில் கூறப்பட்டுள்ளது" எனத் தெரிவித்து 'வீடியோ' செய்தியொன்றை திஹாரியவைச் சேர்ந்த மௌலவி நியாஸ் சித்திக் சிராஜ் விடுவித்துள்ளார். 'வீடியோ'வின் விளைவொன்றாக பெருமளவு முஸ்லிம் அபேட்சகர்கள் தமது பிரச்சாரத்தை கைவிட்டுள்ளனர்[6].

## 7. பொலிசாரினால் பெண் அபேட்சகர் வீடு மீது திடீர் வேட்டை

ஜனவரி 15 அன்று, நுரைச்சோலை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த நான்கு பொலிஸ் அலுவலர்கள் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் அபேட்சகர் ரினுஸா இல்மாவின் வீட்டில் சடுதியாக திடீர் வேட்டையை நடத்தினார்கள். ரினுஸா ஆயுதங்களை வைத்திருப்பதாக 119 என்ற அவசரகால 'ஹொட்லைன்' ஊடாக முறைப்பாடு குறித்த தொலைபேசி அழைப்பொன்றை தாம் பெற்றதாகப் பொலிசார் தெரிவித்தனர். எனினும், பெண் பொலிஸ் ஒருவரின் பிரசன்னமின்றி பொலிஸார் சடுதியாக திடீர் வேட்டையை நடத்தியுள்ளதுடன், இது அவர்களது நியதிக்கு எதிரானதாகும். ஏதேனும் சந்தேகத்திற்குரியதை பொலிஸ் அலுவலர்களினால் கண்டறிய முடியவில்லை. சம்பவத்தின் பின்னர், இன்னொரு பெண் அபேட்சகருடன் பாதிக்கப்பட்டவர் பொலிஸ் நிலையத்திற்குச் சென்று, முறைப்பாடொன்றைச் செய்ய முயற்சித்தார். ஆனால், முறைப்பாட்டினை ஏற்றுக்கொள்வதற்கு பொலிஸார் மறுத்ததுடன், முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்வதற்கான அலுவலர் லீவில் சென்றிருப்பதாகக் கூறினார்கள். இந்தச் சூழ்நிலையில், தேர்தல் ஆணைக்குழுவுடன் பாதிக்கப்பட்டவர் தொடர்பு கொண்டு, சூழ்நிலையை அறியச் செய்தார். தேர்தல் ஆணைக் குழுவின் சம்பந்தத்தின் விளைவொன்றாக, முறைப்பாடு ஏற்றுக்கொள்ளப்பட்டது[7].

---

[6] *http://www.island.lk/index.php?page_cat=article-details&page=article-details&code_title=178551*
*(22 ஜூலை 2018 அன்று அடையப்பட்டது)*

[7] *http://www.island.lk/index.php?page_cat=article-details&page=article-details&code_title=178551*
*(22 ஜூலை 2018 அன்று அடையப்பட்டது)*

## ஆ. வடக்கின் தமிழ் செயலார்வலர்களுக்கு தடைகள் மற்றும் அச்சுறுத்தல்கள்

2009இல் யுத்தம் முடிவடைந்து, 2015இல் அரசாங்கத்தின் மாற்றத்தின் பின்னரும் கூட, பிரஜைகளின் வலிந்த காணாமல்போகச்செய்தல்கள் மற்றும் காணி விடயங்கள் போன்ற பல்-எண்ணிக்கையிலான பிரச்சனைகள் மீது யுத்தத்தினால் சின்னாபின்னமாகியுள்ள வட மாகாணத்தில் உள்ள தமிழர்கள் போராட்டம் நடத்தினர். போராட்டங்கள் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களையும், பாதிக்கப்பட்ட சமூகங்களையும் சேர்ந்த பெண்களினால் வழிநடத்தப்பட்டதுடன், அவை அமைதியாகவும் விளங்கின. ஆனால், போராட்டக்காரர்களும், அவர்களுக்கு ஆதரவளிப்போர்களும் தொடர்ச்சியான கண்காணிப்பு, அச்சுறுத்தல், பயமுறுத்தல்கள், தாக்குதல்கள் மற்றும் கைதுகள் ஆகியவற்றுக்கு உட்பட்டுள்ளனர். இந்தக் காலாண்டின் போது அறிக்கையிடப்பட்ட அத்தகைய சில சம்பவங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

### 8. ஊர்காவற்றுறையில் காணி மீது போராட்டம் நடத்திய தமிழர்கள் கடற்படைப் புலனாய்வாளர்களினால் அச்சுறுத்தப்பட்டனர்




*(பிரதிமை - ஊர்காவற்றுறையில் போராட்டக்காரர்கள், புகைப்படம் - தமிழ் கார்டியன்)*

போராட்டமொன்றில் ஈடுபட்டிருந்த ஊர்காவற்றுறையைச் சேர்ந்த தமிழ் சிவிலியன்கள் ஜனவரி 25 அன்று இலங்கையின் கடற்படைப் புலனாய்வு அலுவலர்களினால் அச்சுறுத்தப்பட்டனர். கடற்படைத் தளமொன்றைச் சுற்றியுள்ள காணியின் 3 ஏக்கர்கள் கொண்ட சிறிய துண்டொன்றில் தாம் வாழ்ந்துவந்ததாகப் போராட்டக்காரர்கள் தெரிவித்தனர். அவர்களது தனிப்பட்ட காணிகளில் தளம் கட்டப்பட்டுள்ளதுடன், 10 வருடங்களாக கடற்படை அதில் குடியிருந்துள்ளது. இதனால் அவர்கள் போராட்டமொன்றை நடத்தி, தமது காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் என கோரிக்கை விடுத்திருந்தனர். இது ஓர் அமைதியான போராட்டமாகும். ஆனால், சீருடைகள் இன்றி வந்த கடற்படை புலனாய்வு ஆளணியினர் போராட்டத்தை நிறுத்துமாறு போராட்டக்காரர்களை அச்சுறுத்தியதாகப் போராட்டக்காரர்கள் வலியுறுத்துகின்றனர்[8].

[8] *http://www.tamilguardian.com/content/navy-intelligence-officers-threaten-tamils-protesting-against-land-grabs-kayts (22 ஜூலை 2018 அன்று அடையப்பட்டது)*

## 9. கேப்பாப்பிலவில் காணி ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போராடுகின்ற தமிழர்களுக்கு எதிரான பொலிஸ் நடவடிக்கை



*(பிரதிமை - கேப்பாப்பிலவில் போராட்டத்தைப் பொலிசார் தடுக்கின்றனர், புகைப்படம் - தமிழ் கார்டியன்)*

2017 மார்ச்சிலிருந்து இராணுவத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமது காணியை விடுவிக்குமாறு முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கேப்பாபிலவில் உள்ள கிராமவாசிகள் தொடர்ச்சியாக போராட்டம் நடத்துகின்றனர். இலங்கையின், 70ஆவது சுதந்திர தினமாகவும், போராட்டத்தின் 339ஆவது தினமாகவும் விளங்கிய பெப்ரவரி 4 அன்று, போராட்டக்காரர்கள் கறுப்புக்கொடியைப் பயன்படுத்தியதுடன், சுதந்திரமாக வாழ்வதற்குக் கூட தமக்குச் சுதந்திரம் இல்லை எனத் தெரிவித்ததுடன், அத்தகையதொரு சுதந்திர தினத்தின் கருத்து என்ன எனவும் கேட்டனர். அவர்கள் அமைதியான ஊர்வலமொன்றில் ஈடுபட்டதுடன், தமது கிராமமாக விளங்கிய இலங்கையின் இராணுவத் தளத்தின் முன்னால் போராட்டமொன்றை நடத்துவதற்கும் முற்பட்டுள்ளனர். எனினும், போராட்டத்தையும், கறுப்புக்கொடிகளைப் பயன்படுத்துவதையும் நிறுத்துமாறு பொலிசார் கட்டளையிட்டனர். பின்னர், போராட்டத்தில் ஈடுபட்ட 5 தமிழர்களுக்கு எதிராக முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தில் வழக்கொன்றைப் பொலிசார் தாக்கல் செய்ததுடன், நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு அவர்களுக்கு கட்டளையுமிடப்பட்டது[9] [10].

## 10. போராட்டமொன்றில் இணைந்த பின்னர் வட மாகாண சபை உறுப்பினர் கைது செய்யப்பட்டார்



*(பிரதிமை - நீதிமன்றத்திற்கு மாகாண சபை உறுப்பினர் கொண்டு செல்லப்படுகின்றார், புகைப்படம் - **www.tamilguardian.com)***

பெப்ரவரி 28 அன்று, வட மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் பொலிசாரினால் கைது செய்யப்பட்டு, முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார். பெப்ரவரி 22 அன்று, முல்லைத்தீவு, வட்டுவாகலில் நடைபெற்ற போராட்டமொன்றின் போது அரசாங்க அலுவலர்களைக் குழப்பினார் என்றும், பொதுச் சொத்தை சேதமாக்கினார் என்றும் திரு.ரவிகரன் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தார். அவர் குற்றத்தை மறுத்துரைத்ததுடன், பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார். போராட்டக்காரர்களின் கூற்றுப்படி, கடற்படைத் தளமொன்றைக் கட்டுவதற்காக 600 ஏக்கர்களைக் கொண்ட தனியார் காணிகள் சுவீகரிக்கப்படவுள்ளதுடன், அரசாங்க வர்த்தமானியில் ஏற்கனவே தீர்மானமும் வெளியிடப்பட்டுள்ளது. நில அளவையாளர்கள் உட்பட அரசாங்க

---

[9] http://www.tamilguardian.com/content/sri-lankan-police-file-case-against-keppapulavu-protesters-independence-day-black-flag (22 ஜூலை 2018 அன்று அடையப்பட்டது)

[10] https://www.tamilguardian.com/content/police-attempt-stop-keppapulavu-families-holding-black-flag-protest (22 ஜூலை 2018 அன்று அடையப்பட்டது)

அலுவலர்கள் அமைவிடத்திற்கு வந்திருந்தனர். ஆனால், மாகாண சபை உறுப்பினரால் வழிநடத்தப்பட்ட போராட்டக்காரர்களினால் அவர்கள் திரும்பி போகச்செய்யப்பட்டனர்[11].

## இ. மாணவ செயலார்வலர்கள் மீதான அடக்குமுறை

கடந்த .சில வருடங்கள் முழுவதும், பொலிசாரினால் மாணவ செயலார்வலர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர், தாக்கப்பட்டுள்ளனர் அத்துடன் தடுக்கப்பட்டுள்ளனர். இந்தக் காலாண்டில் குறைந்தபட்சம் அத்தகைய ஒரு சம்பவம் அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆண்டுக்கணக்காக இலங்கையின் பல்கலைக்கழகங்களில் சிரேஷ்ட மாணவர்களினால் புதிய மாணவர்களைப் பகிடிவதை செய்வது ஒரு பிரச்சனையாக விளங்கியதுடன், இந்தக் காலாண்டில், அத்தகைய பகிடிவதைக்கு எதிராக நின்ற சில மாணவ செயலார்வலர்கள் சக மாணவர்களினால் தாக்கப்பட்டுள்ளதாக அறிக்கையொன்றுள்ளது.

### 11. இரு பகிடிவதை-எதிர்ப்பு மாணவர்கள் மீதான தாக்குதல்




*(பிரதிமை - பேராதனைப் பல்கலைக்கழகம், புகைப்படம் - newsfirst.lk)*

ஜனவரி 14 அன்று பேராதனைப் பல்கலைக்கழகத்தின் இரு மாணவர்கள் பல்கலைக்கழக வளாகத்தில் மாணவர்களைக் கொண்ட இன்னொரு குழுவினால் தாக்கப்பட்டனர். பாதிக்கப்பட்டவர்களின் கூற்றுப்படி, புதிய மாணவர்கள் பகிடிவதை செய்யப்படுவதை அவர்கள் எதிர்த்ததினால், முகாமைத்துவப் பீடத்தின் மாணவர்களினால் அவர்கள் தாக்கப்பட்டனர். பாதிக்கப்பட்டவர்கள் விஞ்ஞான பீடத்தின் மூன்றாம் ஆண்டு மாணவர்கள் என்பதுடன், அவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். பல்கலைக்கழகத்தின் சம்பந்தப்பட்டவர்கள் புலன்விசாரணைகளை நடத்துவதாக வலியுறுத்தப்படுகின்றது[12].

[11] *http://www.tamilguardian.com/content/sri-lankan-police-arrest-npc-councillor-over-land-grabs-protest (22 ஜூலை 2018 அன்று அடையப்பட்டது)*

[12] *http://island.lk/index.php?page_cat=article-details&page=article-details&code_title=178255 (22 ஜூலை 2018 அன்று அடையப்பட்டது)*

## 12. பல்கலைக்கழக மாணவர்களினதும், பெற்றோரினதும் போராட்டம் கலைக்கப்பட்டது



*(பிரதிமை - போராட்டக்காரர்களை நோக்கி பொலிசார் கண்ணீர்புகை ஏவுகின்றனர், புகைப்படம் - நிசால் படுகே - www. dailymirror.lk)*

பல்கலைக்கழகங்களுக்கிடையிலான மாணவர் சம்மேளனமும் [Inter University Students' Federation (IUSF)] மற்றும் மருத்துவ மாணவர்களின் பெற்றோர் சங்கமும் [Parents' Union of the Medical Students (PUMS)] ஒழுங்குசெய்திருந்த போராட்டப் பேரணியொன்று ஜனவரி 25 அன்று கொள்ளுப்பிட்டி சந்தியில் பொலிசாரினால் கலைக்கப்பட்டது. இலங்கைத் தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தினுள் [Sri Lanka Institute of Information Technology (SLIIT)] தென் ஆசிய தொழில்நுட்ப, மருத்துவ நிறுவனத்தை [South Asian Institute of Technology and Medicine (SAITM)] மாற்றுவதற்கான அரசாங்கத்தின் தீர்மானத்திற்கு எதிராகவே போராட்டம் நடைபெற்றது. பிரதமரின் வாசஸ்தலமும் அலுவலகமுமான அலரி மாளிகையை நோக்கி போராட்டக்காரர்கள் முன்னேறுவதற்கு முயன்றார்கள். ஆனால், கொள்ளுப்பிட்டி சந்தியில் தடையரண்களைப் பயன்படுத்தி அவர்களைப் பொலிசார் தடுத்தனர். பின்னர் கண்ணீர் புகையையும், நீர்தாரையையும் பயன்படுத்தி போராட்டக்காரர்களைப் பொலிசார் கலைத்தனர்[13].

[13] http://www.dailymirror.lk/article/Anti-SAITM-protest-teargassed-144624.html
*(22 ஜூலை 2018 அன்று அடையப்பட்டது)*

## ஈ. இதழியலாளர்களுக்கு எதிரான அச்சுறுத்தல்கள் மற்றும் தடைகள்

முந்திய ஆண்டுகளைப் போலன்றி, 2015 முதலான காலம் சார்புரீதியில் இலங்கையில் இதழியலாளர்களுக்கு குறைந்தளவு அச்சுறுத்தலாகக் காணப்பட்டது. எனினும், கடந்த சில ஆண்டுகளாக விளங்கிய விடயத்தைப் போன்று சிங்கள, தமிழ் இதழியலாளர்கள் மற்றும் வெளிநாட்டு இதழியலாளர்கள் இராணுவத்தினாலும், கடற்படையினாலும் மற்றும் அரசியல்வாதியொருவரின் ஆதரவாளர்களினாலும் அச்சுறுத்தப்பட்டனர், தொந்தரவு செய்யப்பட்டனர் அத்துடன் தடுக்கப்பட்டனர். அத்தகையை மூன்று அறிக்கையிடப்பட்ட சம்பவங்கள் கீழேயுள்ளன.

### 13. இரு தொலைக்காட்சி இதழியலாளர்களுக்கு எதிரான அச்சுறுத்தல்கள்




*(பிரதிமை - தாம் அச்சுறுத்தப்பட்டதாக வலியுறுத்துகின்ற இதழியலாளர்கள் - புகைப்படம் - www.bbc.com)*

சிரச மற்றும் தெரண ஆகிய தனியார் தொலைக்காட்சி நிலையங்களைச் சேர்ந்த கபில குருப்பு ஆரச்சி மற்றும் ஜயலத் திசநாயக்க ஆகிய பெயரிலான இரு இதழியலாளர்கள் 2018 ஜனவரி 28 அன்று அச்சுறுத்தப்பட்டனர். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சமூகமளித்திருந்த பதுளையில் நடைபெற்ற ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி (ஸ்ரீ.ல.சு.க.) கூட்டமொன்றில் இதழியலாளர்களை போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவின் பொதுசன உறவுகள் அலுவலர் அஜித் ஹிக்கடுவ லியனகே அச்சுறுத்தியுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. "ஊவ முதலமைச்சர் சாமர திசநாயக்கவினால் பதுளை தமிழ் மகளிர் கல்லூரியின் பாடசாலை அதிபர் மீதான தாக்குதலை அறிக்கையிட்டது குறித்து அலுவலர் அச்சுறுத்தினார்" என இரு இதழியலாளர்களும் பதுளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர். சார்த்துரைகளை லியனகே மறுத்துரைக்கின்றார். பதுளை பொலிசாரினால் CIB 3319/285ஆக முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது[14].

[14] https://www.bbc.com/sinhala/sri-lanka-42851553 (22 ஜூலை 2018 அன்று அடையப்பட்டது)

### 14. ஆயுதப்படைகளினால் அல் ஜஸீரா குழு தடுக்கப்பட்டது




*(இமேஜ்-ருக்கி பர்ணாந்து )*

2018 மார்ச் 12 அன்று பிற்பகல் 12 மணியளவில் கண்டியில் இலங்கையின் கடற்படையினாலும், இராணுவத்தினாலும் அல் ஜஸீரா தொலைக்காட்சியின் குழு தடுக்கப்பட்டது. புவெலிக்கட சந்தியில் இலங்கையின் இராணுவத்தினாலும், கடற்படையினாலும் குழு சுற்றிவளைக்கப்பட்டு, தடுக்கப்பட்டது. வெளி உலகத்திற்கு அத்தகைய சம்பவங்களை அறிக்கையிடுவது அவசியமில்லை என்றும், அத்தகைய அறிக்கையிடுதலைத் தடுப்பதற்கு உயர் மட்டத்திலான சம்பந்தப்பட்டவர்களினால் தமக்கு கட்டளையிடப்பட்டது என்றும் படைகளின் உறுப்பினர்கள் தெரிவித்தனர். சம்பவம் குறித்து INFORM பணியாளரினால் அரசாங்க ஊடகத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டதுடன், அத்தகைய கட்டுப்பாடுகள் நடைமுறையில் இல்லை என்றும், படமெடுப்பதைத் தொடர்வதற்கு சுதந்திரத்தைக் குழு கொண்டுள்ளது என்றும் அவர் உறுதிப்படுத்தினார்.

### 15. இராணுவ அலுவலர்களினால் தமிழ் இதழியலாளர் தொந்தரவு செய்யப்பட்டார்






*(பிரதிமை - அழிக்கப்பட்ட மயானம் (இடது) மற்றும் சண்முகம் தவசீலன் (வலது) – புகைப்படம் - tamilguardian.com / JDS)*

மார்ச் 19 அன்று தமிழ் இதழிலாளரான சண்முகம் தவசீலன் முல்லைத்தீவு மாவட்டத்தில் அளம்பிலில் இராணுவ அலுவலர்களினால் தொந்தரவு செய்யப்பட்டுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

கொழும்பைத் தளமாகக் கொண்ட ஆசிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு இதழியலாளர் பணியாற்றிக் கொண்டிருந்தார்.

2009 முதல் இராணுவத்தின் கீழ் இருந்த மயானம் ஒன்றை நிரந்தரமாகக் கையகப்படுத்துவதற்கு அரசாங்க அலுவலர்களின் தீர்மானத்தின் காரணமாக கோபமடைந்திருந்த அளம்பில் குடியிருப்பாளர்களில் சிலரைச் சந்தித்த பின்னர் அவர் திரும்பிக் கொண்டிருந்தார். நூற்றுக்கணக்கான தமிழ்ப் புலி வீரர்கள் மயானத்தின் அமைதியாகத் துயில் கொள்கின்றார்கள். ஆனால், கல்லறைகளை இராணுவம் அழித்ததுடன், உறவினர்கள் பிரவேசிப்பதையும் தடைசெய்தது. மேலும், கம-வியாபாரத்திற்கும் மற்றும் சிற்றுண்டிச்சாலையொன்றை நிருவகிப்பது உட்பட பெருமளவு வேறு வியாபாரங்களுக்கும் இராணுவத்தினால் மயானம் பயன்படுத்தப்படுகின்றது.

பிரச்சனை மீது இதழியலாளர் அறிக்கையிட்ட அதேவேளை, பகுதியையும் படம்பிடித்தார். ஆனால், இராணுவம் அதைத் தடைசெய்ததுடன், அவரையும் தொந்தரவு செய்தது. அவர்கள் சிரேஷ்ட இராணுவ அதிகாரியிடம் அவரைக் கொண்டு சென்று, படமாக்கப்பட்டதைப் பார்ப்பதற்கு கோரிக்கை விடுத்தது. எனினும், இதழியலாளர் மறுத்துரைத்ததுடன், பிரச்சனை மீது அறிக்கையிடுவதற்கான தனது உரிமையை ஆதரித்துவாதாடினார்.

இராணுவப் பேச்சாளர் ஒருவரின் கவனத்திற்கு சம்பவம் கொண்டு வரப்பட்டது. இதைத் தொடர்ந்து, இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக் குழுவினால் விசாரிக்கப்பட்டு, பின்னர் இதழியலாளரிடம் இராணுவம் மன்னிப்பு கேட்டதாக அறிக்கையிடப்பட்டுள்ளது[15].

[15] http://www.jdslanka.org/index.php/news-features/media/766-sri-lanka-military-harass-tamil-journalist-for-filming-in-occupied-cemetery (22 ஜூலை 2018 அன்று அடையப்பட்டது)

## உ. போராட்டங்களின் அடக்குமுறை

ஆண்டு முழுவதும் மனக்குறைகளின் வகையொன்று மீது போராட்டங்கள் தொடர்ந்தன. இரு அத்தகைய போராட்டங்களில் ஆத்திரமடைந்த போராட்டக்காரர்கள் கற்களை வீசியெறிந்துள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. இரு விடயங்களிலும், பொலிசாரினால் போராட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், ஒரு விடயத்தில் சில போராட்டக்காரர்கள் பொலிஸ் காவலில் தாம் தாக்கப்பட்டதாக முறைப்பாடு செய்துள்ளனர்.

### 16. பொலிஸ் காவலில் போராட்டக்காரர்கள் தாக்கப்பட்டனர்



*(பிரதிமை - சூடு நடத்தப்பட்ட அமைவிடத்தில் பொலிஸ் புலனாய்வு, புகைப்படம் - www.adaderana.lk)*

பொலிசாரைத் தாக்கியதற்காகவும், பொது அமைதியைக் குழப்பியதற்காகவும், பிரதான அடைதல் வீதியை தடை செய்ததிற்காகவும் அத்துடன் சொத்துக்குச் சேதம் விளைவித்ததிற்காகவும் தென் இலங்கையில் உள்ள கதிர்காமத்தில் ஜனவரி 21 அன்று பொலிசாரினால் 13 பெண்கள் உட்பட 58 போராட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டனர். கதிர்காமம் பிரதேச சபையின் ஊழியர் ஒருவர் பொலிசாரினால் கொல்லப்பட்டதே போராட்டத்திற்குப் பின்னாலுள்ள காரணமாகும். மோட்டார் சைக்கிள் ஒன்றில் நண்பர் ஒருவருடன் பாதிக்கப்பட்டவர் பிரயாணம் செய்தார் என்றும், ரோந்துக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிசார் அவர்களை நிற்குமாறு கட்டளையிட்டனர் என்றும், ஆனால் அவர்கள் நிற்கவில்லை என்றும், இதன் விளைவொன்றாக பொலிசார் சுட்டனர் என்றும் பொலிசார் வலியுறுத்துகின்றனர். எனினும், தாம் மோட்டார் சைக்கிளை நிறுத்தியதாகவும், அதில் இருந்து இறங்கியதாகவும் ஆனால், அவ்வாறு செய்த போதிலும், பாதிக்கப்பட்டவரை பொலிசார் சுட்டதாகவும் மோட்டார் சைக்கிளை செலுத்தியவர் தெரிவித்தார்.

ஆத்திரமடைந்த போராட்டக்காரர்கள் கற்களைப் பயன்படுத்தி பொலிசாரைத் தாக்கினார்கள். போராட்டக்காரர்களுக்கு எதிராக கண்ணீர்ப் புகையைப் பயன்படுத்தியதனாலும், பொல்லடிகளை மேற்கொண்டதனாலும் அத்துடன் இறப்பர் ரவைகளைப் பயன்படுத்தியதனாலும் குழப்பமான சூழ்நிலை உச்சநிலையை அடைந்திருந்ததுடன், இறுதியாக சில போராட்டக்காரர்கள் பொலிசாரினால் கைது செய்யப்பட்டார்கள். பொலிஸ் காவலில் தாம் உடல்ரீதியாகத் தாக்கப்பட்டதாக கைது செய்யப்பட்ட சில போராட்டக்காரர்கள் வலியுறுத்தியதுடன், கைது செய்யப்பட்ட போராட்டக்காரர்களில் 7 பேர் பின்னர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்[16] [17] [18].

[16] http://www.adaderana.lk/news/45540/kataragama-shooting-incident-58-protesters-arrested (22 ஜூலை 2018 அன்று அடையப்பட்டது)
[17] http://www.ft.lk/news/Chaos-in-Kataragama-after-fatal-Police-shooting/56-647764 (22 ஜூலை 2018 அன்று அடையப்பட்டது)
[18] https://www.youtube.com/watch?v=oLKGD0ztAX0 (22 ஜூலை 2018 அன்று அடையப்பட்டது)

## 17. போராட்டம் நடத்திய கமக்காரர்கள் கைது செய்யப்பட்டனர்




*(இமேஜ் போராட்டக் காரர்கள் தாக்கப்பட்டனர் முழுமையான வீடியோவிற்கு பார்க்கவும்)*
***https://www.youtube.com/watch?v=pDgrULUGEb8***)

அனுராதபுரம், தம்புத்தேகமவில் பெப்ரவரி 28 அன்று போராட்டம் நடத்திய கமக்காரர்கள் கலைக்கப்பட்டதுடன், அவர்களில் 59 போர் பொலிசாரினால் கைது செய்யப்பட்டனர். போராட்டக்காரர்களின் கூற்றுப்படி, நெற் செய்கைக்காக ராஜாங்கனை நீர்த்தேக்கத்தைப் பெருமளவு ஆண்டுகளாக அவர்கள் பயன்படுத்தி வந்துள்ளார்கள். ஆனால், அதே நீர்த்தேக்கத்தைப் பயன்படுத்தி புதிய தூய்மையான குடி நீர் கருத்திட்டமொன்றைத் தாபிப்பதற்குத் திட்டமொன்று உள்ளதுடன், இது அவர்களது வாழ்க்கையை மறுதலையாகப் பாதிக்கும். இதன் பிரகாரம், ஆயிரக்கணக்கான கமக்காரர்கள் தம்புத்தேகம நகரத்தில் ஒன்றுகூடி, போராட்டத்தை ஆரம்பித்தனர். அவர்களைக் கலைந்து போகச்செய்வதற்காக பொலிசார் முயற்சித்த போது, கமக்காரர்கள் வீதிகளைத் தடை செய்ததுடன், பொலிசாரை நோக்கி கற்களையும் எறிந்தனர். கண்ணீர் புகையையும், நீர்த்தாரைப் பிரயோகத்தையும் பயன்படுத்துவதன் மூலம் பொலிசார் பிரதிபலித்தார்கள். இறுதியாக, போராட்டம் கலைக்கப்பட்டது. ஆனால், பொலிசாரினால் 59 கமக்காரர்கள் கைது செய்யப்பட்டார்கள். சிலர் பிணை மீது விடுவிக்கப்பட்டனர். பொலிசாரின் கூற்றுப்படி, ஏழு பொலிஸார் காயமடைந்திருந்தனர்.

அகில இலங்கை கமக்காரர் சங்கத்தின் தலைவர் நாமல் கருணாரத்ன பின்வருமாறு தெரிவிக்கின்றார்: "நாம் தூய்மையான குடி நீர் கருத்திட்டத்திற்கு எதிரானவர்கள் அல்லர். நாம் அதற்கு முழுமையாக ஆதரவளிக்கின்றோம். ஆனால், இருப்பிடத்தில் 35,000 கமக்காரக் குடும்பங்களுக்கு ராஜாங்கனை நீர்த்தேக்கம் நீரை வழங்குகின்றதுடன், அதன் கருத்திட்டத்திற்கு அத்தகைய மிதமிஞ்சிய தொகையொன்றை அரசாங்கம் பயன்படுத்தும்போது, தமது கமச் செய்கையை கமக்காரர்கள் செய்ய முடியாது என்ற காரணத்தினாலேயே நாம் எதிர்ப்புத் தெரிவிக்கின்றோம். நெற் செய்கையே இக் குடும்பங்களின் பிரதான வாழ்வாதாரமாகும்." அரசாங்கத்தின் குறைபாட்டிலான நீர் கொள்கையிலிருந்தும் மற்றும் நீரின் முன்னுரிமைப்படுத்தலிலிருந்துமே பிரதான பிரச்சனை முளைவிட்டிருப்பதாக கருணாரத்ன குறித்துக்கொண்டார். கருத்திட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது[19] [20].

[19] http://www.ft.lk/news/59-arrests-following-Thambuththegama-riots/56-650395
(22 ஜூலை 2018 அன்று அடையப்பட்டது)
[20] https://www.newsfirst.lk/2018/02/tension-thambuttegama-protesting-farmers-dispersed-police/ (22 ஜூலை 2018 அன்று அடையப்பட்டது)

## ஊ. அச்சுறுத்தல்களினதும், பயமுறுத்தல்களினதும் வேறு வடிவங்கள்

போராட்டமொன்றுக்காக உயர் ஸ்தானிகராலயத்திற்கு வெளியே கூடியிருந்த தமிழ் போராட்டக்காரர்களைக் கொண்ட குழுவொன்றுக்கு தொண்டையை அறுக்கும் சைகையை காட்டியமைக்காக லண்டனில் உள்ள இலங்கையின் உயர் ஸ்தானிகராலயத்தின் உயர் அதிகாரி ஒருவரின் (ஓர் இளைப்பாறிய இராணுவ அலுவலர்) அறிக்கையொன்றுடன் சேர்த்து இப்பகுதியில் சாட்சியமளிப்பதற்காக நீதிமன்றத்தில் வந்திறங்கிய போது பெண் வழக்கறிஞர் ஒருவர் தாக்கப்பட்டமை குறித்த அறிக்கையொன்றும் முனைவுபடுத்தப்பட்டுள்ளது. HIV/AIDS தடுப்புச் செயற்றிட்டமொன்றில் ஈடுபட்டிருந்த அரச சார்பற்ற தாபன ஊழியர்கள் தாக்கப்பட்டமை குறித்தும் பகுதி உள்ளடக்குகின்றது. இறுதியாக, அரசியல்வாதி ஒருவரினால் தரக்குறைவாக நடத்தப்பட்டமை குறித்து முறைப்பாடு செய்ததிற்காகவும், வெளிப்படுத்தியதிற்காகவும் பாடசாலை அதிபர் ஒருவர் மரண அச்சுறுத்தல்களைப் பெற்றது சம்பந்தமான சம்பவமொன்றும் இப்பகுதியில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 18. லண்டனில் இலங்கை உயர் ஸ்தானிகராலய உயர் அதிகாரியினால் அச்சுறுத்தும் சைகை



*(பிரதிமை - செயற்பாட்டில் பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ, புகைப்படம் - www.daillymirror.lk)*

ஐக்கிய ராஜ்யம், லண்டனில் இலங்கையின் உயர் ஸ்தானிகராலயத்தின் பாதுகாப்பு இணைப்பதிகாரியாக விளங்கிய பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ பெப்ரவரி 4 அன்று உயர் ஸ்தானிகராலய அலுவலகத்தின் முன்னால் அமைதியான போராட்டமொன்றை நடத்திய தமிழ்ப் போராட்டக்காரர்களை அச்சுறுத்தியுள்ளதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. புகைப்படங்களினாலும், 'வீடியோ'க்களினாலும் காட்டப்பட்டுள்ளவாறு, போராட்டக்காரர்களுக்கு எதிராக தொண்டையை அறுக்கும் சைகையை பிரிகேடியர் பயன்படுத்தியுள்ளார். வெளிநாட்டு அமைச்சினால் அவரது கடமைகளிலிருந்து பிரிகேடியர் இடைநிறுத்தப்பட்டதாகவும், ஆனால், பின்னர் ஜனாதிபதி அலுவலகப் பணிப்புரையொன்றின் மீது அவர் மீள்-நியமிக்கப்பட்டதாகவும் அறிக்கையிடப்பட்டுள்ளது.

இதனிடையே, பிரிகேடியர் பெர்னாண்டோ மீதான இடைநிறுத்தலை இலங்கை அரசாங்கம் மீளப்பெற்றுள்ளமை குறித்து தாம் சீற்றமடைவதாக ஐக்கிய ராஜ்ய பாராளுமன்ற உறுப்பினர் ஜோவான் ரயான் தெரிவித்தார். "இந்த முக்கிய விடயம் பற்றி நான் ஏற்கனவே ஆசியாவுக்கும், பசுபிக்குக்குமான ராஜாங்க அமைச்சர் மார்க் ஃபீல்ட்டுடன் பேசியுள்ளேன்" என 'டுவிட்டர்' செய்தியில் ஜோவான் ரயன் தெரிவித்துள்ளார்.

பின்னர் பிரிகேடியர் பெர்னாண்டோ இலங்கைக்கு மீள-அழைக்கப்பட்டார். ஆனால், விடயம் குறித்து ஏதேனும் விசாரணைகள் பற்றி தகவல் கிட்டவில்லை[21] [22].

## 19. நீதிமன்ற வளாகத்தின் உள்ளே பெண் வழக்கறிஞர் தாக்கப்பட்டார்




*(பிரதிமை - கொழும்புக்கோட்டை நீதவான் நீதிமன்றம், புகைப்படம் - www.newsfirst.lk)*

குற்றவியல் வழக்கொன்றில் சாட்சியமளிப்பதற்காக ஒரு பெண் வழக்கறிஞர் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத் தொகுதியில் வந்திறங்கிய போது உள்ளே வைத்து அவர் தாக்கப்பட்டார். பாதிக்கப்பட்டவரான சட்டத்தரணி ஹப்ஸா அலி.்.ப் நீதிமன்றத்தில் சாட்சியமளிப்பதற்கு முற்பட்டால் தாக்கப்படுவார் என அவரது முன்னாள் கணவர் டாக்டர் சஷ்லி மௌஜூத் அச்சுறுத்தியதாக சார்த்துரைக்கப்பட்ட பின்னர் அவர் உடல்ரீதியாக தாக்கப்பட்டதாக காணப்பட்டது. நீதவான் நீதிமன்றத் தொகுதியில் பொலிஸ் காவல் நிலையமொன்றில் விரிவான முறைப்பாடொன்றைப் பாதிக்கப்பட்டவர் செய்ததுடன், நீதித்துறை மருத்துவ அலுவலரினால் அவர் பரிசோதிக்கப்பட்டு, அவர் மீதான தாக்குதலிலிருந்து ஏற்பட்ட காயங்கள் பதிவுசெய்யப்பட்டன. எனினும், தாக்குதல் நடத்தியவரை பொலிசார் கைது செய்யவில்லை. ஆனால், பத்து நாட்களின் பின்னர் விடயத்தை கரிசனைக்கு எடுப்பதாக நீதிமன்றம் தீர்மானித்தது. நீதித்துறை விடயமொன்றில் அவர்களது சம்பந்தம் தொடர்பில் குற்றமொன்றில் பாதிக்கப்பட்ட ஒருவரை அல்லது சாட்சியொருவரை தாக்குவது அல்லது அச்சுறுத்துவது வெளிப்படையான குற்றமொன்றாகும் என்பதுடன், இது ஏழு வருடங்கள் வரையிலான சிறைத்தண்டனைக்குரியதாகும் என சட்ட மூலங்கள் கூறுகின்றன. சம்பந்தப்பட்டவர்களின் செயலின்மையானது சிவில் மற்றும் சட்ட சமூகம் மத்தியில் வெறுப்பிலான கோபத்தையும், எச்சரிக்கையையும் விளைவித்துள்ளது[23].

---

[21] http://www.dailymirror.lk/146306/Brigadier-Priyankara-Fernando-arrives- (22 ஜூலை 2018 அன்று அடையப்பட்டது)
[22] http://www.lankabusinessonline.com/tamil-group-urges-action-on-sri-lankan-brigadier-priyanka-fernando/ (22 ஜூலை 2018 அன்று அடையப்பட்டது)
[23] http://www.dailynews.lk/2018/02/13/local/142676/man-attacks-female-lawyer-inside-court-complex (22 ஜூலை 2018 அன்று அடையப்பட்டது)

## 20. முதலமைச்சர் ஒருவரினாலான துஷ்பிரயோகத்தை வெளிப்படுத்தியதற்காக பெண் அதிபருக்கு எதிராக மரண அச்சுறுத்தல்



*(பிரதிமை - சம்பவத்திற்கு முகங்கொடுத்த அதிபர், புகைப்படம் - www.adaderna.lk)*

ஊவா மாகாண முதலமைச்சர் சாமர சம்பத் திசநாயக்கவினால் பரிந்துரைக்கப்பட்ட மாணவர் ஒருவரை அனுமதிக்காதது குறித்து பதுளை தமிழ் மகளிர் பாடசாலையின் அதிபர் ஆர்.பவானியை காலில் விழுமாறு முதலமைச்சரினால் கட்டளையிடப்பட்டதாகச் சார்த்துரைக்கப்படுகின்றது. பின்னர் கொழும்பில் மார்ச் 18 அன்று நடைபெற்ற பத்திரிகை மகாநாடொன்றில் மரண அச்சுறுத்தல்கள் பற்றி அவர் வெளியிட்டார். சம்பவத்தை அவர் வெளிப்படுத்தியதற்காகவும் காலில் விழுமாறு நிர்ப்பந்திக்கப்படுத்தியமைக்காகவும் அத்துடன் நிவாரணத்தைக் கோரியதற்காகவுமே அவர் அச்சுறுத்தப்பட்டார் என நம்பப்படுகின்றது. சம்பவம் குறித்து புறம்பாக பொலிசும் மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவும் ஆரம்பித்தன. இதனிடையே, தனக்கு எதிரான புலன்விசாரணை முடிக்கப்படும் வரை ஊவா மாகாண கல்வி அமைச்சர் பதவியை ராஜினாமா செய்வதாக முதலமைச்சர் திசநாயக்க குறிப்பிட்டிருந்தார். எனினும், அரசியல் செல்வாக்கின் காரணமாக நடந்து கொண்டிருக்கும் புலன் விசாரணை குறித்து தாம் திருப்தியடைவில்லை என அதிபரும், பெருமளவு ஆசிரியர் தொழிற்சங்கங்களைச் சேர்ந்தவர்களும் தெரிவித்தனர்[24] [25].

## 21. HIV/AIDS தடுப்பு கருத்திட்டத்தில் ஈடுபட்டிருந்த அ.சா.தா. ஊழியர்கள் மீது தாக்குதல்

HIV/AIDS தடுப்பு கருத்திட்டமொன்றில் ஈடுபட்டிருந்த அரச சார்பற்ற தாபன ஊழியர்களைக் கொண்ட குழுவொன்று காலியில் மார்ச் 18 அன்று பொலிசினதும், ஊடகங்களினதும் முன்னிலையில் கிராமவாசிகளினால் தாக்கப்பட்டது. பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாப்பதற்கு பொலிசார் நடவடிக்கை எடுக்கவில்லை. இளைஞர்களுக்கு எதிராக மலடாக்கும் மருந்தினை பயன்படுத்தும் செயற்பாடொன்றாக கருத்திட்டத்தை சில கிராமவாசிகள் தப்பாக பொருள் விளக்கமளித்துள்ளனர். GFATMஇன் (AIDS, காசநோய் மற்றும் மலேரியாவுக்கு எதிரான உலகளாவிய நிதியம்) கீழ் கருத்திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது[26].

[24] http://www.adaderana.lk/news/46468/life-threats-to-principal-of-tamil-girls-mv-badulla- (22 ஜூலை 2018 அன்று அடையப்பட்டது)
[25] http://www.hirunews.lk/181499/badulla-female-principal-reveals-her-ordeal (22 ஜூலை 2018 அன்று அடையப்பட்டது)
[26] https://www.youtube.com/watch?v=rPgX1ZWQ3LQ (22 ஜூலை 2018 அன்று அடையப்பட்டது)

## எ. ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம்

### 22. நடைமுறையிலான சட்டத்திற்கான திருத்தமொன்றின் ஊடாக ஒன்றுகூடுவதற்கான சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகள்

2018 பெப்ரவரி 20 அன்று 1980இன் இல.31 (LDO 32/2011) தன்னார்வ சமூக சேவைத் தாபனங்கள் (பதிவு மற்றும் மேற்பார்வை) அதிகாரச்சட்டத்தைத் திருத்துவதற்கும் அத்துடன் அங்கீகாரத்திற்காக அதைப் பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கும் அடக்குமுறையிலான வரைவு அதிகாரச்சட்டமொன்றை அமைச்சரவை அங்கீகரித்தது. உசாவுகைகள் இன்றி இரகசியமாமக வரைவைத் தயாரித்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒன்றுகூடுவதற்கான சுதந்திரத்திற்கான உரிமையை வரைவு மீறுகின்றது, அரசாங்கத்திற்கும் மற்றும் அரசாங்கச் சார்பற்ற நிறுவனங்களுக்கும் இடையிலான ஒருமைப்பாட்டினை மங்கலாக்குகின்றது அத்துடன் நகரத்திற்குரிய இயக்கங்களையும் மற்றும் குழுக்களையும் கண்காணிப்பதற்கும், கட்டுப்படுத்துவதற்கும் அத்துடன் தலையிடுவதற்கும் பரந்த அதிகாரங்களையும் அத்துடன் பொலிசுக்கும் மற்றும் நீதித்துறைக்கும் வழமையாக ஒதுக்கப்பட்டுள்ள அதிகாரங்களையும் வழங்குகின்றது. செயலார்வலர்களிடமிருந்து பரவலான விமர்சனத்தை திருத்தம் ஈர்த்தெடுத்தது. அதிகரித்த அழுத்தத்தின் காரணமாக, பிரதமருக்கும், அரசாங்க அதிகாரிகளுக்கும் மற்றும் நாடு முழுவதிலிருந்து கரிசனையிலான செயலார்வலர்களுக்கும் இடையிலான கூட்டமொன்றின் போது அதை மீளப்பெறுவதற்கு அட்டவணைப்படுத்திய அமைச்சர் உடன்பட்டதுடன், புதியதொரு சட்டத்தின் ஊடாக கரிசனைகளைக் கவனத்திற்கெடுக்குமாறு அமைச்சு அதிகாரிகளுடன் பணியாற்றுவதற்கு செயலார்வலர்களைக் கொண்ட குழுவொன்றை அடக்கும் குழுவொன்றை அமைச்சர் கேட்டுக்கொண்டார்[27] [28] [29].

[27] http://www.cpalanka.org/wp-content/uploads/2018/03/CPA-Note-on-VSSO-Amendment-2018-FINAL-2-1.pdf (கடைசியாக 19 ஜூலை 2018 அன்று அடையப்பட்டது)

[28] https://groundviews.org/2018/03/22/crippling-civic-organising-mobilising-and-resistance-through-draft-ngo-act-amendment/ (கடைசியாக 19 ஜூலை 2018 அன்று அடையப்பட்டது)

[29] https://twitter.com/ManoGanesan/status/978617985156788224 & https://twitter.com/ManoGanesan/status/978618562850910208 (கடைசியாக 19 ஜூலை 2018 அன்று அடையப்பட்டது)